**பொதுக்காலத்தின் பதினைந்தாம் ஞாயிறு**

**திருவழிபாடு ஆண்டு - C**

**2025-07-13**

*(இன்றைய வாசகங்கள்:*

*இணைச்சட்ட நூலிலிருந்து வாசகம். 30:10-14,*

*திபா 69: 13. 16. 29-30. 35,36,*

*திருத்தூதர் பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 1: 15-20,*

*லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 10:25-37)*

*திருப்பலி முன்னுரை*

*அடுத்திருப்பவர்களே, பொதுக்காலத்தின் பதினைந்தாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு வரவேற்கிறோம். இறையன்பு மற்றும் பிறரன்பு கட்டளைகளை நம் வாழ்வில் செயல்படுத்த இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கிறது. நம்மை நாமே நேர்மையாளர்களாக எண்ணிக் கொள்ளாமல், கடவுளின் முன்னிலையில் நாம் நேர்மையாளர்களாக இருக்க வேண்டும் என்பதே ஆண்டவரின் விருப்பம். இயேசுவின் வழியில், கடவுளுக்கும் மற்ற மனிதர்களுக்கும் அடுத்திருப்பவர்களாய் வாழ அழைக்கப்படுகிறோம். எரிகோ செல்லும் பாதையில் அடிபட்டுக் கிடந்தவரை கண்டுகொள்ளாமல் சென்ற யூத குருவையும், லேவியரையும் போன்று மனிதநேயம் இல்லாதவர்களாய் நடந்துகொண்ட தருணங்களுக்காக மன்னிப்பு வேண்டுவோம். நல்ல சமாரியரைப் போன்று, தேவையில் இருப்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுபவர்களாய் வாழ வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*இறைவா! எம் தந்தையே!*

*உமது கட்டளைகளும், நியமங்களுமான உம் திருமகன் "நாசரேத்தூராரை" எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் ஏற்புடைய முறையில் இனம் கண்டுகொண்டு, அவரை நிறைவேற்றிட அருள் தர இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*இயேசுவின் தந்தையே எம் இறைவா!*

*படைப்பனைத்தின் பிதாமகரான எம் ஏகப் பரம்பொருள் இயேசு இறைவனை அனைத்துலகும் அறிந்து கொள்ள அருள்புரியும். அவரால் படைக்கப்பட்ட அனைத்தும், அனைவரும் அவரோடிணைந்து நிலைபெற உம்மை மன்றாடுகின்றோம்.*

*இறைவா! எம் தந்தையே!*

*உம் முழுநிறைவையும் தம்மிலே குடிகொள்ளச் செய்துள்ள எம் இறைவன் இயேசு கிறிஸ்துவை நாங்கள் நிறைவாய் அறிந்திடவும், அனைத்தையும் அவரில் ஒப்புரவாக்கிடவும் அருள்புரிய இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*மாண்புடைய இறைவா!*

*உமதருளால் எம் பெருமைக்குரிய உயிரான இயேசு ஆண்டவரை நாங்கள் எம் முழு இதயத்தோடும். முழு உள்ளத்தோடும். முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் அன்பு செய்திட, அவரில் அகமும் புறமும் மலர்ந்திருக்க அருள்புரிய இறைவா, உம்மை வேண்டுகிறோம்.*

*இரக்கத்தின் இறைவா!*

*உம் திருமகனின் வாழ்வைப் பின்பற்றி, நாங்கள் இரக்கத்தை, அன்பை, அருளைப் பிறரோடு பகிர்ந்திட அருள் தர இறைவா, உம்மை வேண்டுகிறோம் .*

வாழ்வின் துணையாம் இறைவா,

நோய், துன்பம், அழுகை போன்றவற்றையே வாழ்க்கையாக கொண்டிருக்கும் மக்கள், மன அமைதியையும், மகிழ்ச்சியையும் சுவைக்கும் வகையில் புதிய வாழ்வைக் காண துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

வானக அரசரே இறைவா,

உமது உண்மையின் அரசைப் புறக்கணித்து, உலகைச் சார்ந்த தங்கள் சொந்த விருப்பங்களில் நாட்களை செலவிடும் எம் நாட்டு மக்கள் அனைவரும், நிலை வாழ்வைப் பற்றிய உண்மைகளை விரும்பித் தேட துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.